//நினைவூட்டு//

சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண்.3827/ஆ2/2023, நாள். 08.09.2023

பொருள்: பள்ளிக்கல்வி- சென்னை மாவட்டம்- தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்- புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire award) - 2023-20234 ஆம் ஆண்டிற்கு புதிய பதிவுகள் மேற்கொள்ள கோரப்பட்டது- விண்ணப்பிக்கும் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது- விண்ணப்பிக்க கோருதல் - சார்ந்து

பார்வை:
1. சென்னை-25, தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநரின் கடித எண்.2226/ P1/2023, நாள்.22.05.2023 மற்றும் 23.06.2023.
2. சென்னை-25, தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநரின் கடித எண்.3335/P1/2022, நாள்.14.07.2023
3. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34784/எம்/இ1/2023, நாள். 19.07.2023.
4. சென்னை -08, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.387/ஆ2/2023, நாள். 09.06.2023, 01.08.2023 மற்றும் 16.08.2023.
5. சென்னை-25, தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநரின் கடித எண்.2226/ P1/2023, நாள்.01.09.2023.

.....

பார்வை (4) இல் காண் இவ்வலுவலக செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் சார்பாக நடத்தப்படும் 2023-2024 ஆம் கல்வியாண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான புதிய பதிவுகள் மேற்கொள்ள சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் ஆர்வமுள்ள மாணவர்களை www.inspireawards-dst.gov.in என்ற இணையதளத்தில் 01.05.2023 முதல் 31.08.2023 வரை பதிவுகள் மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பார்வை 5இல் காண் கடிதத்தின்படி, விண்ணப்பம் பதிவேற்றம் செய்ய 30.09.2023 வரை கூடுதலாக காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாய்ப்பினை பயன்படுத்தி விடுபட்ட தகுதியுள்ள மாணவர்களை புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுக்கான புதிய பதிவுகள் மேற்கொள்ள www.inspireawards-dst.gov.in என்ற இணையதளத்தில் அவர்கள் பயின்றுவரும் பள்ளிகள் வழியே விண்ணப்பிக்க

உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்/ முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பார்வை 5இல் காண் கடித நகல்.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

8/9/2023.

பெறுநர்

அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள்,

சென்னை மாவட்டம் (உரிய மாவட்ட கல்வி அலுவலர்கள் வாயிலாக)

நகல்

1. சென்னை-25, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சென்னை-06, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள் (இடைநிலை, தனியார் பள்ளிகள் மற்றும் தொடக்கக் கல்வி),

   சென்னை மாவட்டம். ( தங்கள் பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் இச்செயல்முறையினை அனுப்பிவைக்க தெரிவிக்கப்படுகிறது.)

**Tamilnadu Science and Technology Centre**
(Department of Higher Education, Government of Tamilnadu)
Gandhi Mandapam Road, Chennai - 600 025.

Office : 044 - 24410025
Direct : 044 - 24918787
Website: www.tnstc.gov.in
E-mail : tnstc.science@gmail.com

**Thiru. I.K. Lenin Tamilkovan, M.Sc.,**
**Executive Director, FAC.,**

006873

3827/2023

கடித எண் 2226/P1/2023 நாள் 1.09.2023

05 SEP 2023

பெறுநர்:

முதன்மைக் கல்வி அலுவலர்
மாவட்டம் சென்னை

அன்புடையீர்!

பொருள்: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் சென்னை -25 புத்தாக்க அறிவியல் மானக் விருது - 2023-2024 ஆம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் மேற்கொள்வது தொடர்பாக

பார்வை: ஒன்றிய அரசு அறிவியல் தொழில்நுட்பத்துறை, புதுதில்லி கடித எண் F.No.I/01/2019-IAM தேதி 21-06-2022
இம்மைய அலுவலகக் கடித எண் 2226/ /P1/2023 நாள்: 22-05-2023
14-07-2023, 31-07-2023, 9-08-2023 மற்றும் 21-08-2023

-------------

வணக்கம்.

2023-2024 ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான புதிய பதிவுகள் 2023 மே 1-ந்தேதியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. அதற்காக பள்ளி ஆசிரியர்கள் கடந்த ஆண்டுகளில் மாணவர்களின் பெயர்களைப் பதிவு செய்ததைப் போல www.inspireawards-dst.gov.in என்ற இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டும். 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

இது பற்றிய கடிதம் 22-5-2023 அன்று அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அடுத்துத் தொடர்ந்து அவ்வப்போது பதிவு செய்த பள்ளிகள் விவரமும் அனுப்பப்பட்டு வருகிறது.

2009 ஆம் ஆண்டிலிருந்து கொரானா காலம் வரை புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுகள் பதிவில் முன்னிலையில் இருந்த தமிழ்நாடு தற்போது மிகவும் பின்தங்கியுள்ளது. புத்தாக்க அறிவியல் ஆய்வு விருது தற்போது மாணவர்கள் அளிக்கிற ஆய்வுகளின் தரம் அறிந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு தொகை வழங்கப்படுகிறது என்பதை மனதில் கொண்டு தரமுள்ள ஆய்வுகளின் அடிப்படையில் விண்ணப்பிக்க வேண்டும்.

2023 ஆகஸ்ட் 31-ந்தேதி வரையில் தமிழ்நாட்டிலிருந்து விண்ணப்பிக்கப்பட்ட பள்ளிகள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 30 வரை விண்ணப்பங்களை இணைய தளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்பதை நினைவூட்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

1/9/23
செயல் இயக்குநர் (மு.கூ.பொ)